# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 160/2019 தேதி- 09.09.2025

(D.W.2) - கிறிஸ்துதாஸ்

**குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் பூவை நாடாருக்கு உரிமைப்பட்ட சொத்தை அவர் இறந்தபின்பு ஆசீர்வாதம், ஞானமுத்து, ஜோசப் ஆகியோர் வாக்கால் பாகம் நடைபெறவில்லை என நான் கூறுகிறேன் அதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்திருப்பதாக நினைக்கிறேன். வழக்கு சர்வே சொத்து எனது அப்பா ஆசீர்வாதத்திற்கு எப்படி கிடைத்து என்றால் என் அப்பா விலைக்கு வாங்கினார். எப்போது வாங்கினார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. யாரிடமிருந்து வாங்கினார் என்றால் கபிரியேல் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினார் .

எனது எதிருரையில் எனது அப்பா ஆசீர்வாதம் கபிரியேல் என்பவரிமிருந்து எந்த ஆவணத்தின்மூலம் விலைக்கு வாங்கினார் என்கிற விபரத்தை கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் கூறுவதுபோல் எனது அப்பா கபிரியேல் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கவில்லை அப்படி வாங்கியிருந்தால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு 148/4, 144/10 ஆகிய சர்வே நம்பர்களில் சொத்து இருக்கிறதா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எனது அப்பா ஆசீர்வாதம் இறந்தபின்பு அவரது வாரிசுகளான நாங்கள் யாருக்காவது விலைக்கு கொடுத்தோமா என்றால் வீடு இல்லாத இடத்தை ஜான்சன்மனைவி மேரி சரோஜினிக்கு விலைக்கு கொடுத்தோம்.

தெரசம்மாள், லூக்காஸ், அல்போன்ஸ், கிறிஸ்துதாஸ், மத்தியாஸ் ஆகியோர் சேர்ந்துதான் விலைக்கு கொடுத்தோமா என்றால் சேர்ந்துதான் விலைக்கு கொடுத்தோம். அந்த ஆவணத்தில் ஆசீர்வாதமும் அவர்களது சகோதரர்களும் கூட்டாக அனுபவித்து வந்து வாக்கால் பாகம் செய்ததாக குறிப்பிட்டிருக்கிறோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த பின்பு அவர்விட்டு சென் ற சொத்தில் எனது அம்மா தெரசம்மாள் சகோதரர்கள் லூக்காஸ், அல்போன்ஸ், கிறிஸ்துதாஸ், மத்தியாஸ், பிரான்சிஸ் மற்றும் சகோதரி நிர்மலா ஆகியோருக்கு உரிமை இருக்கிறதா என்றால் உரிமை இருக்கிறது. மேரிசரோஜினிபாய்க்கு

விலைக்கு கொடுத்ததுபோல் சொத்தை விற்கவேண்டுமென்றால் அனைவரும் கூட்டாகத்தான் விற்பனை செய்யவேண்டுமென்றால் சரிதான்.

வாதி எத்தனை சென்ட் சொத்தை வழக்கு பட்டிகை சொத்தாக சேர்த்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதி வீட்டடி சொத்தில் பாகம் வேண்டுமென்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வீட்டடி சொத்து மொத்தம் 12 3/4 சென்ட் சொத்து என்றால் சரிதான். மேற்படி 12 3/4 சென்ட் சொத்து பூவையன் நாடாருக்கு உரிமைப்பட்டது என்றால் எனது அப்பா ஆசீர்வாதம் மற்றும் எனது பெரியப்பா ஞானமுத்து விலைக்கு வாங்கிய சொத்து. எனது அப்பாவும் பெரியப்பாவும் சேர்ந்து வாங்கிய சொத்தில் ஜோசப்பிற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் என்னுடைய அப்பா மற்றும் பெரியப்பாவிடம் ஜோசப் எனக்கு இடம் வேண்டும் என்று கேட்டதால் அவருக்கு நடுவில் இடம் ஒதுக்கப்பட்டது.

ஜோசப்பிற்கு ஒதுக்கப்பட்ட நடு சொத்தை வாக்கால் அல்ல ஆவணத்தின் மூலம்தான் கொடுத்தோம் எந்த ஆவணத்தின்மூலம் கொடுத்தோம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விலையாதாரமாக எழுதிக்கொடுத்தோம். நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்துள்ளேன். ஆசீர்வாதம் மற்றும் ஞானமுத்து நாடார் விலை வாங்கிய ஆவணத்தையும் அதிலிருந்து ஜோசப்பிற்கு விலை கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என் அப்பா இறந்தபின்புதான் வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமாக எனது அம்மா தெரசம்மாள் எனது பெயருக்கு பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது அப்பா இறந்தபின்பு என் அம்மா அனுபவத்தில்வைத்து அதை எழுதிக்கொடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதில் எனது அப்பாவும் ஞானமுத்துநாடாரும் விலை வாங்கி அனுபவித்து வந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை.

மேரிசரோஜினிக்கு அனைவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்ததுபோல் இந்த பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் தெரசம்மாளை தவிர வேறு யாரும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2001 ஆம் ஆண்டு

ஆசீர்வாதத்திற்கு உரிமைப்பட்ட சொத்தை அவரது மனைவி தெரசம்மாள் முழு சொத்தை எனக்கு எழுதிக்கொடுக்க எந்த அவகாசமும் இல்லை என்றால் எனது அம்மாவிற்கு முழு உரிமை இருந்ததால் எனக்கு எழுதிக்கொடுத்தார். எனது அப்பா என் அம்மாவிற்கு உயில் ஏதாவது எழுதிக்கொடுத்தாரா செட்டில்மெண்ட் ஆவணம் ஏதாவது எழுதிக்கொடுத்தாரா என்றால் வாக்கால் என் அம்மாவிற்கு கொடுத்தார். ஆவணம் எதுவும் இல்லை.

என் அப்பா என் அம்மாவிற்கு ஒப்படைக்கும்போது எனக்கும் எனது சகோதரர்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என எழுதிக்கொடுத்தாரா என்றால் என்னைத்தவிர அனைவருக்கும் 10 சென்ட் தனியாக ஒதுக்கப்பட்டு எனக்கு 4 1/4 சென்ட் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது. எனது சகோதரர் 2 ஆம் பிரதிவாதியான லூக்காஸ்சுடன் எனக்கு எந்த விரோதமும் கிடையாது. 2 ஆம் பிரதிவாதி பிரதிவாதி தரப்பு முதல் சாட்சியாக வந்து அனைவருக்கும் 10 சென்ட் ஒதுக்கியிருப்பதாக குறுக்கு விசாரணையில் கூறியிருக்கிறார். அது சரிதானா என்றால் சரிதான். எனக்கும் 10 சென்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறது என சாட்சி கூறுகிறார்.

மேற்படி 10 சென்ட் மேரிசரோஜினிக்கு விலை கொடுத்த சொத்தின் அருகில் இருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 30 வருடங்களுக்கு மேலாக நான் வெளிநாட்டில் இருந்து வருகிறேன். நான் வெளிநாட்டில் இருக்கும்போது வீடு வைப்பதற்கு சர்வே நம்பர் 383/1 மற்றும் 383/1 எ ஆகிய சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எனது சகோதரி நிர்மலாவிடமிருந்து வாங்கினேன். அதை விலைக்கு வாங்கிய பின்பு அதில் வீடு வைத்திருக்கிறேன் என்றால் வீடு வைக்கவில்லை. வாங்கியதுபோல்தான் இருக்கிறது. மேற்படி சொத்தை நிர்மலா யாரிடமிருந்து வாங்கினார் என்றால் மரியதாஸ் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினேன். நீதிமன்றத்தில் வழக்கு பட்டிகை சொத்தை தவிர வேறு சொத்தோ,, குடியிருக்க வீடோ இல்லை என நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு எனது தாத்தா பூவையன்நாடார் உயிருடன் இருக்கும் போது உள்ள வீடு என்றால் சரியல்ல. ஆசீர்வாதம் நாடாரான எனது அப்பாதான் வீடு கட்டினார். 12 3/4 சென்ட் சொத்தில் வீடு எந்த பக்கம் இருக்கிறது என்றால் கிழக்கு பக்கம் ரோட்டின் அருகில் இருக்கிறது. வீடு எத்தனை வருடம் பழக்கம் இருக்கும் என்றால் 50 அல்லது 60 வருட பழக்கம் இருக்கும். எனது அப்பா கிழக்கு பக்கம் வீடு வைத்துள்ள பகுதியும் நடுவில் ஜோசபிற்கும், மேற்கு பக்கம்

ஞானமுத்துவிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

என் அப்பா இறக்கும்போது அனைவரும் வேலைக்கு சென்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தீர்களா என்றால் என் அப்பா இறக்கும் முன்பே வாதி தனியாக வீடுவைத்துவிட்டார். அது எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் வழக்கு சொத்திலிருந்து 3, 4 வீடு தள்ளி இருக்கும். வாதி எனது அப்பாவையும் அம்மாவையும் பார்க்க வருவாரா என்றால் அவருடன் நல்ல உறவில் இல்லை. வாதிதான் அவரது அப்பாவையும் அம்மாவையும் பராமரித்து அவர்களது இறுதி சடங்குகளையும் செய்தார் என்றால் சரியல்ல.

2001ஆம் ஆண்டு என் அம்மா எனக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா. ஆ.1 ஆவணத்தில் வீடு எப்படி இருந்ததோ அதேபோல்தான் தற்போது இருக்கிறது என்றால் அப்படி இல்லை இரண்டுமுறை ஓடை மாற்றியுள்ளோம். என் அப்பா இறந்தபின்பு இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் வாங்கினேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆசீர்வாத நாடார் இறப்பின் அடிப்படையில் வாரிசு சான்றிதழின் அடிப்படையில் வாதிக்கு வழக்கு பட்டிகை சொத்தில் பாகம் கிடைக்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பாவின் இறப்பின் அடிப்படையில் அவருக்கு இருந்த உரிமையை அவர் யாருக்கும் விட்டுக்கொடுக்கவில்லை அதனால் எனது அம்மாவிற்கு வழக்கு பட்டிகை சொத்து முழுவதையும் எனக்கு எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதியின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் வருவாய் ஆவணத்தில் வாதி மற்றும் எனது அப்பாவின் வாரிசுகள் அனைவரின் பெயர்களும் இருப்பதால் வாதிக்கு அதில் பங்கு கேட்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல. வாதியை தவிர அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நாங்கள் அனைவரும் திருமணம் ஆகி அவரவர் குடும்பத்துடன் தனியாக தாமசித்து வருகிறோம். வாதிதான் திருமணம் ஆகாமல் அவருடைய தாய் தந்தையரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.